දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
INLAND REVENUE DEPARTMENT

ලේකම් අංශය
14 වන මහල
දේශීය ආදායම් ගොඩනැගිල්ල
ශ්‍රීමත් චිත්තම්පලම් ඒ ගාඩිනර් මාවත
තැ.පෙ. 515, කොළඹ 2- ශ්‍රී ලංකාව

செயலகம்
14 வது மாடி
உள்நாட்டு இறைவரிக் கட்டிடம்
சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை
த.பெ.இல. 515, கொழும்பு - 2, இலங்கை

Secretariat
14th Floor
Inland Revenue Building
Sir Chittampalam A Gardiner Mawatha
P.O. 515, Colombo 2 - Sri Lanka

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 011 - 2338635

දුරකථන / தொலைபேசி / Telephone: 011- 2135406/ 2135410/ 2135412 / 2135413

E-Mail –tpl@ird.gov.lk / itp@ird.gov.lk
Web: www.ird.gov.lk

சுற்றிக்கை இலக்கம் **: SEC/2025/E/03** 2025 மார்ச் **28**

***வட்டி வருமான நிறுத்திவைத்தல் வரிக்கு உட்பட்ட ஆனால் வரி விதிக்கக்கூடிய வருமானம் இல்லாத வதிவுடைய தனிநபர்களுக்கான சுற்றறிக்கை***

இந்த சுற்றறிக்கை, 10% வீதத்தில் வட்டி மீதான முற்பண வருமான வரி (AIT - நிறுத்தி வைத்தல் வரி)க்கு உட்பட்ட, ஆனால் வரி மதிப்பீட்டு ஆண்டிற்கான மதிப்பிடத்தக்க வருமானம் ரூ. 1,800,000 என்ற தனிப்பட்ட நிவாரணத் தொகையை விஞ்சாத சுய பிரகடனத்தைச் சமர்ப்பிப்பதற்கு விரும்பும், வதிவுடைய தனிநபர்கள் வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களுக்கு நடைமுறையை வகுக்கிறது. சுய பிரகடனத்தின் நோக்கம், வட்டி செலுத்துதல்களில் மீதான நிறுத்திவைத்தல் வரியிலிருந்து நிவாரணம் கோருவதாகும்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருடனான சந்திப்பைத் தொடர்ந்து, மார்ச் 28, 2025 (FP/R/01/01/05/09/2025) திகதியிட்ட கடிதத்தின் ஊடாக, திறைசேரிச் செயலாளரிடமிருந்து பெறப்பட்ட அறிவுறுத்தல்களின்படி, இந்த சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது (பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட உள்ள, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் முறையான திருத்தங்களுக்கு உட்பட்டது).

**சுய பிரடகனங்களைச் சமா்ப்பிப்பதற்கான அறிவுறுத்தல்கள்**

**1.** சுய-பிரகடனத்தை சமர்ப்பிக்க விரும்பும் தனிநபர்கள் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்தல் வேண்டும்:
(அ) இலங்கையில் வதிவினைக் கொண்ட தனிநபராக இருக்க வேண்டும் (2017 ஆம் ஆண்டு 24 ஆம் எண் உள்நாட்டு வருவாய் சட்டத்தின் விதிகளின்படி)
(ஆ) அவர் **வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து** வட்டியைப் பெற வேண்டும் அல்லது வட்டி கிடைக்கப் பெற வேண்டும் மற்றும்
(இ) அனைத்து வருமான மூலங்களிலிருந்தும் அவரது மதிப்பிடத்தக்க வருமானம் தொடர்புடைய மதிப்பீட்டு ஆண்டிற்கு ரூ. 1,800,000 ஐ விட அதிகமாக இருக்கக்கூடாது.

**வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள் என்பது** 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கி சட்டத்தினால் வரைவிலக்கனப்படுத்தப்பட்டுள்ள அனுமதிபத்திரதார விஷேட வங்கி மற்றும் மக்கள் வைப்பினை ஏற்றுக்கொள்ளும் இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரம் வழங்கப்பட்ட வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் உட்பட வங்கி செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள நிறுவனமாகும்.

**மதிப்பிடக்கூடிய வருமானம் என்பது** 2017 ஆம் ஆண்டின் இலக்கம் 24 கொண்ட உள்நாட்டு இறைவரி சட்டத்தின் (திருத்தத்திற்கு அமைய) ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டு, ஊழிய, வியாபார, முதலீடு (வட்டி வருமானம் உட்பட) மற்றும் ஏனைய வருமான வகைகள் மூலம் வரி மதிப்பீட்டு ஆண்டுக்குள் கிடைக்கப் பெற்ற, கிடைக்க எதிா்பாக்கும் அல்லது ஈட்டப்பட்ட மொத்த வருமானமாகும்.

உதாரணம் 1 : திரு கருணாதாச 62 வயது நிரம்பிய ஓய்வு பெற்ற கணக்காளா் என்பதுடன் அவா் 2025/2026 மதிப்பீட்டு ஆண்டுக்குள் மாதம் ஒன்றிற்கு ரூபா 95,000 ஓய்வுதீய சம்பளத்தினைப் பெற்றுக் கொள்கின்றாா். அவருக்கு பல வங்கிகளில் நிலையான வைப்பு மற்றும் சேமிப்பு வைப்புக்கள் இருப்பதுடன் அவ் வைப்புக்கள் மூலம் மாதாந்தம் ரூபா 118,000 வட்டி வருமானம் எதிா்பாா்க்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக அவா் கணக்குப் பதிவு பணிகளின் மூலம் (செலவினம்

இன்றி) அண்ணளவாக 20,000 ஈட்டுகின்றார். அவரது மதிப்பிடத்தக்க வருமானம் மற்றும் செல்லுபடியாகும் பிரகடனத்தைச் சமர்ப்பிக்க அவருக்கு உள்ள தகுதியின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**2025/2026 மதிப்பீட்டு ஆண்டிற்காக மதிப்பிடத்தக்க வருமானத்தினை கணிப்பீடு செய்தல்.**

| **வருமானம்** | **ரூபா.** |
|---|---|
| ஊழிய வருமானம் - ஓய்வூதிய சம்பளம், வருமான வரியில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது | - |
| வர்த்தக வருமானம் - தொழில்சார் சேவைகள் மூலமான கிடைப்பனவு மற்றும் இலாபம் 20,000 *12 | 240,000 |
| முதலீட்டு வருமானம் - வட்டி வருமானம் = 118,000*12 | 1,416,000 |
| **மதிப்பித்தக்க வருமானம்** | **1,656,000** |

திரு. கருணாதாச அவர்களின் மதிப்பீட்டு ஆண்டிற்காக அவரின் மதிப்பீட்டிற்கு உட்படுத்த முடியுமான வருமானம் ரூபா 1,800,000 வை விஞ்சவில்லை என்பதனால் செல்லுபடியாகும் பிரகடனத்தைச் சமர்ப்பிப்பதற்கு அவருக்கு உரிமை உண்டு.

உதாரணம் 2 : 50 வயது நிரம்பிய திருமதி இராஜபக்ஷ தனியார் வங்கியில் சேவையாற்றியதுடன் அவர் 2025/2026 மதிப்பீட்டு ஆண்டுக்குள் மாதாந்தம் 325,000 சம்பளத்தினைப் பெற்றுக் கொள்கின்றார். ஆவரின் ஐந்தாண்டு நிலையான வைப்பு 2025.09.10 ஆம் திகதி முதிர்வடைவதுடன், வைப்பிற்காக கிடைக்க வேண்டிய வட்டி 700.000 ஆகும். அவர் மாதாந்தம் ரூபா 12,000 விவசாய வருமானத்தினை (செலவினங்களின் பின்னர்) எதிர்பார்க்கின்றார். அவரது மதிப்பிடத்தக்க வருமானம் மற்றும் செல்லுபடியாகும் பிரகடனத்தைச் சமர்ப்பிக்க அவருக்கு உள்ள தகுதியின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**2025/2026 மதிப்பீட்டு ஆண்டிற்காக மதிப்பிடத்தக்க வருமானத்தினை கணிப்பீடு செய்தல்.**

| **வருமானம்** | **ரூபா.** |
|---|---|
| ஊழிய வருமானம் - தனியார் வங்கியினால் கிடைக்கும் ஓய்வூதிய சம்பளம் 125,000 *12 | 3,900,000 |
| வியாபார வருமானம் – விவசாய செயற்பாடுகள் மூலமான கிடைப்பனவுகள் மற்றும் இலாபம் 12,000 *12 | 144,000 |
| முதலீட்டு வருமானம் - வட்டி வருமானம் | 700,000 |
| **மதிப்பித்தக்க வருமானம்** | **4,744,000** |

திருமதி ராஜபக்ஷ அவர்களின் 2025/2026 மதிப்பீட்டு ஆண்டிற்கான மதிப்பீடு செய்ய முடியுமான வருமானம் ரூபா 1,800,000 வை விஞ்சுகின்றது. எனவே இவர் செல்லுபடியாகும் பிரகடனத்தைச் சமர்ப்பிப்பதற்கு தகமை பெறுவதில்லை என்பதுடன், இவரின் வட்டி வருமானம் 2025/2026 மதிப்பீட்டு ஆண்டிற்காக முற்பண வருமான வரியைக் (AIT) கழிப்பதற்கு உட்படும்.

உதாரணம் 3: மெதுலி ரத்நாயக்க, திரு. சமன் ரத்நாயக்கவின் 14 வயது மகள். அவருக்கு ஒரு வங்கியில் ஒரு நிலையான வைப்புத்தொகை உள்ளது, இது ரூ. 800,000 வட்டியுடன், ஜூலை 2025 இல் முதிர்ச்சியடையும்,. மேலும், அவரது சேமிப்புக் கணக்கிலிருந்து வரும் வட்டி வருமானம் மாதந்தோறும் ரூ. 12,000 அவரது கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. திரு. சமன் ரத்நாயக்க ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளர், அவரது மாதாந்திர ஊதியம் ரூ. 420,000. அவருக்கு மாதாந்த வட்டி வருமானம் ரூ. 15,000 ஆகும். கொடுக்கப்பட்ட தகவல் மதிப்பீட்டு ஆண்டு 2025/2026 தொடர்பானது.

மெதுலி ரத்நாயக்க மற்றும் திரு. ரத்நாயக்க ஆகியோரின் மதிப்பிடத்தக்க வருமானம் மற்றும் செல்லுபடியாகும் பிரகடனத்தைச் சமர்ப்பிக்க அவர்களின் தகுதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**மெதுலி ரத்நாயக்க**

**2025/2026 மதிப்பீட்டு ஆண்டிற்காக மதிப்பிடத்தக்க வருமானத்தினை கணிப்பீடு செய்தல்.**

| **வருமானம்** | **Rs.** |
|---|---|
| முதலீட்டு வருமானம் - வட்டி வருமானம் 800,000+12,000*12 | 944,000 |
| **மதிப்பித்தக்க வருமானம்** | **944,000** |

**சமன் ரத்நாயக்க**

**2025/2026 மதிப்பீட்டு ஆண்டிற்காக மதிப்பிடத்தக்க வருமானத்தினை கணிப்பீடு செய்தல்.**

| **வருமானம்** | **Rs.** |
|---|---|
| ஊழிய வருமானம 420,000 *12 | 5,040,000 |
| முதலீட்டு வருமானம் - வட்டி வருமானம் 15,000 *12 | 180,000 |
| **மதிப்பித்தக்க வருமானம்** | **5,220,000** |

2025/2026 மதிப்பீட்டு ஆண்டிற்கான திரு. ரத்நாயக்கவின் மதிப்பிடத்தக்க வருமானம் ரூ. 1,800,000 ஐ விட அதிகமாக உள்ளது, ஆனால் அவரது மகளின் வருமானம் அவ்வாறு இல்லை. எனவே, திரு. சமன் ரத்நாயக்க தனது மகளின் சார்பாக செல்லுபடியாகும் பிரகடனத்தை சமர்ப்பிக்கலாம், ஆனால் தனக்காக சமர்ப்பிக்க முடியாது.

**மதிப்பீட்டு ஆண்டு** என்பது எந்தவொரு வருடத்திலும் ஏப்ரல் முதல் நாளில் தொடங்கி அடுத்த ஆண்டு மார்ச் முப்பத்தி ஒன்றாம் தேதி முடிவடையும் பன்னிரண்டு மாதக் காலமாகும்.

உதாரணமாக: மதிப்பீட்டு ஆண்டு 2025/2026 என்பது ஏப்ரல் 1, 2025 அன்று தொடங்கி மார்ச் 31, 2026 அன்று முடிவடையும் 12 மாதக் காலமாகும்.

**2.** சுய பிரகடனப் படிவத்தை (இணைப்பு 1) உள்நாட்டு இறைவரி இணையத்தளம் www.ird.gov.lk ஊடாக பதிவிறக்கம் செய்ய முடியும். (முகப் பக்கம் : பதிவிறக்கம் படிவம் மற்றும் விபரத்திரட்டுக்கள்). உள்நாட்டு இறைவரி இணையத்தளம் ஊடாக பதிவிறக்கம் செய்யப்பட்ட படிவத்தினை மாத்திரம் பயன்படுத்துவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன.

**3.** அனைத்து வெளிப்பாடுகளிலும் வரி செலுத்துநனர் அடையாள அட்டை இலக்கம் (TIN) இருக்க வேண்டும்.

**4.** ஒருவர் ஒன்றுக்கும் மேற்பட்ட வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களில் வைப்புத்தொகையை வைத்திருந்து, ஒவ்வொரு நிறுவனத்திற்கும் சுய பிரகடனத்தைச் சமர்ப்பிக்க விரும்பினால், ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஒரே தகவல்களை உள்ளக்கி தனித்தனி அறிவிப்புகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

**5.** முந்தைய நிலையை மாற்றி ஒரு புதிய வைப்புத்தொகை திறக்கப்பட்டால், முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் சுய பிரகடனம் செல்லாததாகிவிட்டால், புதிய சுய பிரகடன அறிவித்தல் ஒன்றை மதிப்பீட்டு ஆண்டிற்கு சமர்ப்பிக்கலாம்.

**6.** பதினெட்டு வயதிற்கு குறைந்த குழந்தையின் சார்பாக, பாதுகாவலர் பிரகடனத்தைச் சமர்ப்பிக்கலாம். பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் வரி அடையாள அட்டை இலக்கம் ஆகியவை பிரகடனத்தில் வழங்கப்பட வேண்டும்.

**7.** கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர்கள் சுய அறிவிப்புகளைச் சமர்ப்பிக்க விரும்பினால், ஒவ்வொரு நபரும் தங்கள் வட்டிப் பகுதிக்காக தனித்தனி பிரகடனங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

**8.** வைப்பாளாரின் வட்டிக் கொடுப்பனவுகளில் இருந்து **AIT கழிப்பதற்கு முன்னர்**, அனைத்து மதிப்பீட்டு ஆண்டிற்காகவும் சுய பிரகடனங்கள் உரிய வங்கியிற்கு அல்லது நிதி நிறுவனத்திற்கு கிடைக்கப்பெறுதல் வேண்டும். சமர்பிக்கப்பட்ட பிரகடனம் கிடைப்பதற்கு முன்னர் வங்கி அல்லது நிதி நிறுவனத்தினால் AIT கழிக்கப்பட்டு இருப்பின், வங்கி அல்லது நிதி நிறுவனத்தினால்

கழிக்கப்பட்ட AIT யை நபருக்கு மீள செலுத்த முடியாது. அவ்வாறான சந்தர்பங்களில் மீள்கொடுப்பனவுக்கு தகமை பெற்ற நபர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஊடாக நிதியினை மீள செலுத்துவதற்கு கோரிக்கை விடுக்க வேண்டும்.

**9.** சுய பிரகடனங்கள் செல்லுபடியாகுவது வருடத்தின் ஏப்ரல் 1 ஆம் திகதியில் இருந்து ஆரம்பமாகி அடுத்த ஆண்டில் மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்து ஆண்டிற்காக 12 மாத காலப் பகுதியினைக் கொண்ட அவ் மதிப்பீட்டு ஆண்டிற்காக மாத்திரமாகும்.

**10.** ஒரு தனிநபரினால் வங்கியிற்கு அல்லது நிதி நிறுவனத்திற்கு உரியவாறு பூரணப்படுத்தி சமர்பிக்கப்பட்ட சுய வெளிப்பாடு வரி உத்தியோகத்தருக்கு மேற்கொள்ளும் பிரகடனமாகக் கருதப்படுவதுடன், அவ்வாறான சுய பிரகடனங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ள தகவல்களின் உண்மைத் தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் உரிய வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து அவ் வெளிப்பாட்டு தகவல்கள் சேகரிக்கப்படும்

**11.** சுய பிரகடனங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ள தகவல்களின் உண்மைத் தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக மென் பொருள் செயற்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன. இம் மென் பொருளைப் பயன்படுத்தி, உள்நாட்டு இறைவரி திணைக்களம் (IRD) மூலம் சுய பிரகடனங்களை மீளாய்விற்கு உட்படுத்தப்படுகின்றது. சுய பிரகடனங்கள் வெளிப்பாடுகள் செல்லுபடியற்றது என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (IRD) மூலம் தீர்மானிக்கப்படும் பட்சத்தில், வங்கயிற்கு அறிவித்தல் வழங்கப்படுவதுடன், சமர்பிக்கப்பட்ட வெளிப்பாடு செல்லுபடியற்றது என்று கருதி வங்கியினால் முற்பண வருமான வரி (AIT) கழிக்கப்படும். அவ்வாறான விடயங்கள் தொடர்பில் எந்தவொரு பிரச்சினைகளும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரி உத்தியோகத்தர் ஊடாக தீர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

**12.** சுய பிரகடனத்தில் வழங்கப்பட்டுள்ள தகலவ்களின் உண்மைத் தன்மை தொடர்பில் வரி உத்தியோகத்தரின் வினவும் போது அவ்வாறு வழங்கப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் உண்மையானது மற்றும் நேர்மையானதாக இருத்தல் வேண்டும்.

**13.** இச் சுற்றறிக்கையின் தேவைகளுக்கு அமையாத எந்தவொரு சுய பிரகடனமும் செல்லுபடியற்றது என்று கருதப்பட வேண்டும். மேலும், முழுமையாக பூரணப்படுத்தப்படாத அல்லது மோசடியான வெளிப்பாடு வங்கி மற்றும் நிதி நிறுவனத்தினால் நிராகரிக்கப்படும். நபர் ஒருவரினால் போலியான அல்லது வழிதவறக் கூடிய தகவல்கள் கொண்ட வெளிப்பாடுகளை சமர்பிப்பதாயின், ஆணையாளர் நயாகம் வெளிப்படுத்துனருக்கு இப் பொறிமுறை ஊடாக முற்பண வருமான வரி (AIT) இற்காக சலுகையினைப் பெற்றுக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. மேலும் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் (திருத்தியமைக்கபட்டவாறு) 181 ஆவது பரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தண்டனை விதிக்கப்படும்.

**14.** ஒரு நபர் தமது நிரந்த முகவரியிற்கு அண்மித்த உள்நாட்டு இறைவரி பிராந்திய அலுவலகம் அல்லது நகர அலுவலகம் ஊடாக வங்கியிற்கு அல்லது நிதி நிறுவனத்திற்கு சமர்பிக்கப்பட வேண்டிய வெளிபாட்டிற்கு ஏற்புடையதான எந்தவொரு பிரச்சினையையும் தீர்க்கும் வகையிலும் அவ் அண்மித்த உள்நாட்டு இறைவரி பிராந்திய படிவத்தின் பிரதியினை பெற்றுக் கொள்ள வேண்டியதுடன், அப் படிவத்தினை பூரணப்படுத்தும் வகையில் பிராந்திய அலுவலகம் அல்லது நகர அலுவலகத்தின் உள்நாட்டு இறைவரி உத்தியோகத்தரின் உதவியினைப் பெற்றுக் கொள்ள முடியும். இது தொடர்பில் ஏதேனும் தவலுக்காக தங்களுக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்புக்கள் அவசியமாயின் 1944 ஊடாக உள்நாட்டு இறைவரி அழைப்பு மத்திய நிலையத்தை அழைக்க முடியும்.

ஒப்பிடமிடப்பட்டது
ரூக்தேவி பீ. எச். பிரானாந்து
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

**இணைப்பு 1**

ශ්‍රී ලංකා දේශීය ආදායම්
இலங்கை உள்நாட்டு இறைவரி
**Sri Lanka Inland Revenue**

………………………………………………
………………………………………………
……………………………………………… டிற்கு

(வங்கி / நிதி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி)

**வரி விதிக்கக்கூடிய வருமானம் இல்லாத வதிவுடைய தனிநபர்களுக்கான பிரகடனம்**

கணக்கு இலக்கம் / இலக்கங்கள் ……………………………………………………………………
……………………………………………………………………………………………………
வரி மதிப்பீட்டாண்டு - ***20......*** ஏப்ரல் ***01*** தொடக்கம ***20……..*** மார்ச் ***31*** வரை(***20…./ 20 ….)***
வரி செலுத்துநர் அடையாள இலக்கம் (TIN) ………………………………………………..
தேசிய அடையாள அட்டை இலக்கம் ………………………………………………..

……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
(முகவரியில்) வசிக்கும்…………………………………………………...........................
(வெளிப்பாட்டாளரின் முழுப் பெயர்) ஆகிய நான் ……………………………………………..
பின்வருமாறு பிரகடனம் செய்கின்றேன்

1. இலங்கையில் வதிவுடைய நபர், (2017 இலக்கம் 24 கொண்ட உள்நாட்டு இறைவரி சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கு அமைய)

2. நான் ………………………………………………………………………. ( பராயம் அடையாத குழந்தையின் முழுப் பெயர்) வின் பாதுகாவலர் ஆவேன்.

3. மேற்கண்ட மதிப்பீட்டு ஆண்டிற்கான *எனது/அவன்/அவளது பிற மதிப்பிடத்தக்க வருமானத்தின் மொத்தத்துடன் சேர்த்து, இந்த *வங்கி/நிதி நிறுவனத்தில் உள்ள மேற்கண்ட கணக்கில்/கணக்குகளில்* உள்ள வைப்புத்தொகையிலிருந்து அல்லது வேறு ஏதேனும் வங்கி அல்லது நிதி நிறுவனத்தில் உள்ள வேறு ஏதேனும் கணக்கிலிருந்து, *நான்/அவன்/அவள் பெற்ற மற்றும் பெறக்கூடிய மொத்த வட்டி ரூ. 1,800,000 ஐ விஞ்சவில்லை.

எனவே, இந்த *வங்கி/நிதி நிறுவனத்தில்* எனது/ அவன்/அவள் பெயரில் பராமரிக்கப்படும் அனைத்து கணக்குகளுக்கும் செலுத்த வேண்டிய வட்டியிலிருந்து முன்பண வருமான வரியைக் கழிக்க வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

4. இவ் வெளிப்பாட்டின் மூலம் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கு எட்டிய வகையில் மற்றும் நம்பிக்கைக்கு அமைய உண்மையானது என்று தெரிவிக்கின்றேன். இவ் வெளிப்பாடு 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் (திருத்தியமைகப்பட்டவாறான) ஒழுங்குவிதிகளுக்க அமைய வரி உத்தியோத்தருக்கு சமா்பிப்பதாக அறிவிக்கின்றேன். மேலும், வரி உத்தியோகத்தருக்கு சமா்பிகப்பட்ட உண்மைக்குப் புறம்பான அல்லது வழிதவறக் கூடிய சிறு வெளிப்பாடுகள் தண்டனைக்கு உட்படுத்துவதற்கு மற்றும் சட்ட ஒழுங்குகளுக்கு உட்படுத்துவதற்கு காரணமாக அமையும் என்று விளங்கிக்கொள்கின்றேன்.

திகதி : ………………………………. ஒப்பம் : …………………………

(* தயவு செய்து பொருத்தமல்லாத கூற்றுகளை நீக்கவும்)

**மதிப்பிடக்கூடிய வருமானம் என்பது** 2017 ஆம் ஆண்டின் இலக்கம் 24 கொண்ட உள்நாட்டு இறைவரி சட்டத்தின் (திருத்தத்திற்கு அமைய) ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டு, ஊழிய, வியாபார, முதலீடு (வட்டி வருமானம் உட்பட) மற்றும் ஏனைய வருமான வகைகள் மூலம் வரி மதிப்பீட்டு ஆண்டுக்குள் கிடைக்கப் பெற்ற, கிடைக்க எதிர்பாாக்கும் அல்லது ஈட்டப்பட்ட மொத்த வருமானமாகும்.